நகராட்சி அலுவலகம்
பொன்னேரி .

கூட்டம் எண். 01/ 2024 நாள்.13.03.2024

## அவசரக்கூட்டம்

பொன்னேரி நகராட்சியின் நகர்மன்ற அவசரக்கூட்டம் நகர்மன்றத் தலைவர் டாக்டர் . திருமதி. கே. பரிமளம் விஸ்வநாதன் M.B.B.S., D.G.O அவர்களின் தலைமையில் 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14.03.2024 வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகர்மன்றக்கூடத்தில் நடைபெறும் . அவ்வமயம் கீழ்க்கண்ட பொருள்கள் குறித்து விவாதித்து முடிவெடுக்கப்பட உள்ளதால் துணைத்தலைவர் மற்றும் அனைத்து உறுப்பினர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்மன்றத்தலைவர்
பொன்னேரி நகராட்சி

## நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்

### பொருள் எண் 1

பொன்னேரி நகராட்சியில் பாதாள சாக்கடை திட்ட பணிகள் முடிவுற்றதாலும் மற்றும் இயற்கை இடர்பாடுகள் காரணமாக சேதமடைந்த கீழ்க்காணும் விவரப்படியான சாலைகளை சீரமைக்கும் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பொதுநிதி 2023–24–ன் கீழ் மேற்கொள்ள தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகள் ரூ.152.30 இலட்சத்திற்கு உரிய நிர்வாக அனுமதி வேண்டி கருத்துருவினை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு அனுப்பியது மன்றத்தின் பார்வைக்கு.

| வ. எண் | வார்டு எண் | பணிகளின் விவரம் | மதிப்பீட்டு தொகை ( ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| | | பொதுநிதி 2024-25 | |
| 1. | 10 | சர்மா அவென்யூ (183010S089) மற்றும் சர்மா அவென்யூ 1வது தெருக்களுக்கு (183010S090) சிமெண்ட் சாலை அமைத்தல் | 10.20 |
| 2 | 19 | ஆண்டவர் தெரு (183019S146) ஆண்டவர் குறுக்கு தெரு (183019S147) மற்றும் அம்பேத்கர் 2வது குறுக்கு தெருவிற்கு (183019S149)) சிமெண்ட் சாலை அமைத்தல் | 11.20 |
| 3 | 19 | எம்.பி.ஏ சர்ச் 1வது குறுக்கு தெரு (183019L013) மற்றும் எம்.பி.ஏ சர்ச் 2வது குறுக்கு தெருக்களுக்கு (183019S152) பேவர்பிளாக் சாலை அமைத்தல் | 4.60 |
| 4 | 19, 23 | கணபதி நகர் (183019S153) மற்றும் துர்கா நகர் 4வது தெருக்களில் (183023S223) சிமெண்ட் சாலை அமைத்தல் | 14.00 |

| | | | |
|---|---|---|---|
| 5 | 20 | அக்பர் தெரு (183020S157)) மற்றும் ராஜாராணி தெருவிற்கு (183020S158) சிமெண்ட் சாலை அமைத்தல் | 10.10 |
| 6 | 20 | என்.ஜி.ஓ நகர் அம்பேத்கர் தெருவிற்கு (183020R157) சிமெண்ட் சாலை அமைத்தல் | 20.00 |
| 7 | 21 | பர்மா நகர் 3வது தெரு (183021S170) மற்றும் பர்மா நகர் 4வது தெருவிற்கு (183021S171) பேவர்பிளாக் சாலை அமைத்தல் | 6.40 |
| 8 | 21 ,17 | தேவத்தம்மன் கோயில் தெரு (183021R162) மற்றும் ஸ்ரீசக்தி நகர் (183017R145) ஆகிய தெருக்களில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 16.30 |
| 9 | 24 | கருமாரியம்மன் கோயில் முதல் தெரு (183024S225) , கருமாரியம்மன் கோயில் 1வது குறுக்கு தெரு (183024S226), கருமாரியம்மன் கோயில் 2வது தெரு (183024S227)மற்றும் கருமாரியம்மன் கோயில் 2வது குறுக்கு தெருக்களுக்கு (183024S228) சிமெண்ட் சாலை அமைத்தல் | 14.00 |
| 10 | 25 | அம்பேத்கர் தெருவிற்கு (183025S252 சிமெண்ட் சாலை அமைத்தல் | 20.00 |
| 11 | 27 | மாதவன் நகர் ((183027S265) மற்றும் மாதவன் நகர் குறுக்கு தெருவிற்கு (183027S266) சிமெண்ட் சாலை அமைத்தல் | 13.50 |
| 12 | 10 | தேரடி 1வது தெரு பகுதியில் (183010S082) சிமெண்ட் சாலை அமைத்தல் | 12.00 |

அலுவலகக்குறிப்பு

1. மேற்படி பணிக்குண்டான செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம்அனுமதி அளிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண். 104 /2023/இ1)

நகர்மன்ற தீர்மான எண்: 444 நாள்: **14.03.2024**

**தீர்மானம்: 1.** பொதுநிதி **2024– 25–ம்** நிதியாண்டின் மதிப்பீடுகள் ரூ.**152.30** இலட்சத்திற்கு செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டியுள்ளதால் – மன்றம் அனுமதி வழங்குகிறது.

**2.** பணியின் அவசியம் கருதி தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் அனுமதி அளிக்கிறது.

**பொருள் எண் 2**

பொன்னேரி நகராட்சியில் பொதுநிதி **2024–25–ம்** திட்டத்தின்கீழ் இவ்வலுவலக ஒப்பந்தபுள்ளி அறிக்கை ந.க.எண் **104** /**2023** / இ**1** நாள் **06.03.2024** ன்படி கீழ்க்காணும் விவரப்படியான பணி மேற்கொள்ள

12.03.2024 அன்று பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | சர்மா அவென்யூ (183010S089 ) மற்றும் சர்மா அவென்யூ 1வது தெருக்களுக்கு ((183010S090) சிமெண்ட் சாலை அமைத்தல் | 10.20 | ஒப்பந்த புள்ளி ஏதும் வரப்பெறவில்லை | |
| 2 | ஆண்டவர் தெரு (183019S146) ஆண்டவர் குறுக்கு தெரு (183019S147) மற்றும் அம்பேத்கர் 2வது குறுக்கு தெருவிற்கு (183019S149)) சிமெண்ட் சாலை அமைத்தல் | 11.20 | Land Star Infra Tech<br>மதிப்பீட்டை விட 0.03% குறைவு | Land Star Infra Tech<br>மதிப்பீட்டை விட 0.03% குறைவு |
| 3 | எம்.பி.ஏ சர்ச் 1வது குறுக்கு தெரு (183019L013) மற்றும் எம்.பி.ஏ சர்ச் 2வது குறுக்கு தெருக்களுக்கு (183019S152) பேவர்பிளாக் சாலை அமைத்தல் | 4.60 | Land Star Infra Tech<br>மதிப்பீட்டை விட 0.05% குறைவு | Land Star Infra Tech<br>மதிப்பீட்டை விட 0.05% குறைவு |
| 4 | கணபதி நகர் (183019S153) மற்றும் துர்கா நகர் 4வது தெருக்களில் (183023S223) சிமெண்ட் சாலை அமைத்தல் | 14.00 | Land Star Infra Tech<br>மதிப்பீட்டை விட 0.04% குறைவு | Land Star Infra Tech<br>மதிப்பீட்டை விட 0.05% குறைவு |
| 5 | அக்பர் தெரு (183020S157) மற்றும் ராஜாராணி தெருவிற்கு (183020S158) சிமெண்ட் சாலை அமைத்தல் | 10.10 | RDS & Co<br>மதிப்பீட்டை விட 0.02% குறைவு | RDS & Co<br>மதிப்பீட்டை விட 0.02% குறைவு |
| 6 | என்.ஜி.ஓ நகர் அம்பேத்கர் தெருவிற்கு ((183020R157 ) சிமெண்ட் சாலை அமைத்தல் | 20.00 | Land Star Infra Tech<br>மதிப்பீட்டை விட 0.03% குறைவு | Land Star Infra Tech<br>மதிப்பீட்டை விட 0.03% குறைவு |
| 7 | பர்மா நகர் 3வது தெரு (183021S170) மற்றும் பர்மா நகர் 4வது தெருவிற்கு (183021S171) பேவர்பிளாக் சாலை அமைத்தல் | 6.40 | RDS & Co<br>மதிப்பீட்டை விட 0.03% குறைவு | RDS & Co<br>மதிப்பீட்டை விட 0.03% குறைவு |
| 8 | தேவத்தம்மன் கோயில் தெரு (183021R162) மற்றும் ஸ்ரீசக்தி நகர் (183017R145) ஆகிய தெருக்களில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 16.30 | RDS & Co<br>மதிப்பீட்டை விட 0.02% குறைவு | RDS & Co<br>மதிப்பீட்டை விட 0.02% குறைவு |
| 9 | கருமாரியம்மன் கோயில் முதல் தெரு (183024S225) , கருமாரியம்மன் கோயில் 1வது குறுக்கு தெரு | 14.00 | சுமன் மதிப்பீட்டை விட 0.01 % குறைவு | சுமன் மதிப்பீட்டை விட 0.01 % குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | (183024S226), கருமாரியம்மன் கோயில் 2வது தெரு (183024S227)மற்றும் கருமாரியம்மன் கோயில் 2வது குறுக்கு தெருக்களுக்கு (183024S228) சிமெண்ட் சாலை அமைத்தல் | | பி.ஜோதீஸ்வரன் மதிப்பீட்டை விட 0.25 % குறைவு | |
| 10 | அம்பேத்கர் தெருவிற்கு (183025S252 சிமெண்ட் சாலை அமைத்தல் | 20.00 | Land Star Infra Tech மதிப்பீட்டை விட 0.03% குறைவு<br>O.S.R & Co மதிப்பீட்டை விட 0.45% அதிகம் | Land Star Infra Tech மதிப்பீட்டை விட 0.03% குறைவு |
| 11 | மாதவன் நகர் ((183027S265) மற்றும் மாதவன் நகர் குறுக்கு தெருவிற்கு (183027S266) சிமெண்ட் சாலை அமைத்தல் | 13.50 | R.பிரகாஷ் மதிப்பீட்டை விட 0.02% குறைவு<br>O.S & Co மதிப்பீட்டை விட 1.29% அதிகம் | R.பிரகாஷ் மதிப்பீட்டை விட 0.02% குறைவு |
| 12 | தேரடி 1வது தெரு பகுதியில் (183010S082) சிமெண்ட் சாலை அமைத்தல் | 12.00 | RDS & Co மதிப்பீட்டை விட 0.01% குறைவு | RDS & Co மதிப்பீட்டை விட 0.01% குறைவு |

அலுவலக குறிப்பு

1. மேற்படி பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தபுள்ளியை ஏற்கலாம்.
2. வரிசை எண் 1 ற்கு ஒப்பந்தபுள்ளி ஏதும் வரப்பெறவில்லை. எனவே மறு ஒப்பந்தபுள்ளி கோரலாம்.
3. வரிசை எண் 2,3,4,5,6,7,8 மற்றும் 12 ஆகிய பணிகளுக்கு ஒரே ஒரு ஒப்பந்தபுள்ளி வரப்பெற்றுள்ளது. இந்த பணிகளுக்கான ஒப்பந்தபுள்ளிகள் மதிப்பீட்டிற்கு குறைவான ஒப்பந்தபுள்ளியாக இருப்பதால் வரும் பாராளுமன்ற தேர்தல் வரவிருப்பதால் உடனடியாக மறு ஒப்பந்தபுள்ளி கோர இயலாத பட்சத்தில் 3 மாததிற்கு பிறகு புதிய விலைப்பட்டியல் வரும்போது திருத்திய மதிப்பீடு ( Revised Estimate ) தயாரித்து ஒப்பந்தப்புள்ளி கோரும்போது கூடுதல் செலவினம் ஏற்படுவதை தவிர்க்கும்பொருட்டு இந்த ஒப்பந்தபுள்ளியினை ஏற்கலாம்.
4. வரிசை எண் 9,10,11 ஆகிய பணிகளுக்கான குறைவு ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள கலம் எண்.6 ல் குறைந்த ஒப்பந்தபுள்ளி ஏற்கலாம்.

( ந.க.எண் 104/2023 /இ1)

நகர்மன்ற தீர்மான எண்: 445 நாள்: 14.03.2024

**தீர்மானம் : 1.** மேற்படி பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தபுள்ளியை ஏற்கலாம்.

2. வரிசை எண்.1 ஒப்பந்தபுள்ளி வராததால் மறுஒப்பந்தபுள்ளி கோரலாம்.

**3.**வரிசை எண்.**2,3,4,5,6,7,8 & 12** ஒரே ஒரு ஒப்பந்தபுள்ளி வரப்பெற்று இவையாவும் ஒப்பந்தபுள்ளிகள் மதிப்பிட்டிற்கு குறைவாக இருப்பதால், பாராளுமன்ற தேர்தல் வரவிருப்பதால், உடனடியாக மறு ஒப்பந்தபுள்ளி கோர இயலாத **3** month பிறகு புதிய விலைபட்டியல் வரும்போது Revised Estimate தயாரித்து ஒப்பந்தபுள்ளி கோரும்போது கூடுதல் செலவினம் ஏற்படுவதை தவிர்க்கும்பொருட்டு இந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்கலாம்.

**4.** Serial No 9,10,11 – பணிகளின் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த கலம் எண்.**6–**ல் குறைந்த ஒப்பந்தபுள்ளி ஏற்கலாம் **–** மேற்கூறிய அனைத்திற்கு மன்றம் ஒப்புதல் வழங்குகிறது.

## பொருள் எண் 3

ஆறாவது மாநில நிதிக்குழு **2022-23** ன்கீழ் பொன்னேரி நகராட்சிக்கு கீழ்க்காணும் விவரப்படியபான பணியினை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண் **34832**/2023/எம்ஏ**1** நாள் **08.03.2024** ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு.

| வ.எண் | வார்டு எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை ( ரூ. இலட்சத்தில் ) |
|---|---|---|---|
| **1** | 12 & 10 | அரிஅரன் பஜார் தெருவில் அமைந்துள்ள பழைய பேருந்து நிலையம் பகுதி (சர்வே எண் 345/3,4) மற்றும் தேரடி தெருவில் அமைந்துள்ள புதிய பேருந்து நிலைய வளாகத்தில் (சர்வே எண் 460/3 ஹ) கிழக்கு பகுதியில் புதியதாக கடைகள் அமைத்தல் | 130.00 |

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதி அளிக்கலாம்.
( ந.க.எண் 977/2023 /இ1)

நகர்மன்ற தீர்மான எண்: 446 நாள்: **14.03.2024**

**தீர்மானம்:** **6th** மாநில நிதிக்குழு **2022** – **2023**ன் கீழ் நகராட்சி நிர்வாக இயக்குநர், Chennai – செயல்முறை கடிதம் ந.க.எண். **34832/2023** எம்ஏ**1** **08.03.2024** நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. **12**&10 ward களில் – Hariharan Bazaar –survey survey எண். **345/3,4**, பழைய Bus stand - மற்றும் புதிய பேருந்து நிலையம் Survey No.460/3 (A) கிழக்கு பகுதியில் புதியதாக கடைகள் அமைத்தல் **–** மன்றத்தின் பார்வைக்கு

## பொருள் எண் 4

அரசாணை (நிலை) எண் **32** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் துறை ( MC -7 ) நாள் **04.03.2024** ன்படி **2023**ம் ஆண்டு மழையினால் பாதிக்கப்பட்ட வீடுகள் பழுதுபார்த்தல் மற்றும் புனரமைப்பு பணிகளை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து நகராட்சி நிர்வாக

மண்டல இயக்குநர், செங்கல்பட்டு அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் 404/2024/ஆ1 நாள் 07.03.2024 ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு.

1. புதிய வீடுகள் கட்டுதல் – 12 எண்ணிக்கை – ரூ 4.00 இலட்சம் வீதம் (ஒரு வீட்டிற்கு) மொத்தம் ரூ.48.00 இலட்சம்.

2. வீடுகள் பழுதுபார்த்தல் – 122 எண்ணிக்கை – ரூ.2.00 இலட்சம் வீதம் (ஒரு வீட்டிற்கு) மொத்தம் ரூ.244.00 இலட்சம்.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றத்தின் பார்வைக்கு.
( ந.க.எண் 354 /2024 /இ1)

நகர்மன்ற தீர்மான எண்: 447 நாள்: **14.03.2024**

**தீர்மானம்:** அரசாணை எண்.**32** , குடிநீர் துறை – நாள் **04.03.2024** ன்படி **2023** – ஆண்டு மழையினால் பாதிக்கப்பட்ட வீடுகள் பழுது பார்த்து மற்றும் புதியதாக வீடுகட்டுதல் பணிகளை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து – RDMA – அவர்களின் செயல்முறைகள் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள **1.**புதிய வீடுகள் கட்டுதல் **– 12** ரூ.**4** .00 இலட்சம் வீதம் **2.** வீடுகள் பழுது பார்த்தல் – **122** Nos. ரூ 2.00 இலட்சம் மன்றத்தின் பார்வைக்கு

## <u>பொருள் எண் 5</u>

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கினங்க பொதுமக்களின் கோரிக்கைகளை அவர்களின் இருப்பிடத்திலேயே நிவர்த்தி செய்யும் பொருட்டு ‘‘மக்களுடன் முதல்வர்’’ என்னும் சிறப்பு திட்டத்தின் கீழ் பொன்னேரி நகராட்சி பகுதியில் **04.01.2024, 09.01.2024** மற்றும் **10.01.2024** ஆகிய நாட்களில் சிறப்பு முகாம்கள் நடைபெற்றது. அம்முகாம்களுக்கு தேவையான சார்மினார் பந்தல், நாற்காலிகள், RAM. ஒலி ஒளி அமைப்புகள், குடிநீர் ஆகியவற்றிற்குள்ளான செலவினம் **ரூ. 2 ,30,000/–** பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மேற்படி பணியின் செலவினத்தினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**(ந.க.எண்.1431/2024/இ1)**

நகர்மன்ற தீர்மான எண்: 448 நாள்: **14.03.2024**

**தீர்மானம்:** மக்களுடன் முதல்வர் என்னும் சிறப்பு திட்டத்தின் கீழ் **04.01.2024, 09.01.2024** & **10.01.2024** ஆகிய நாட்களில் சிறப்பு முகாம்கள் நடைபெற்றது. தேவையான சார்மினார் பந்தல், நாற்காலிகள், RAM.

ஒலி ஒளி அமைப்புகள், குடிநீர் – செலவினம் 2,30,000/– பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கிறது.

## பொருள் எண் 6

பொன்னேரி நகராட்சி பல்வகை செலவினங்களுக்காக ரூ. 5000 /- முன்வைப்புத்தொகையாக வழங்க பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ள மன்ற ஒப்பதலுக்கு.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி அளிக்கலாம்.
(ந.க.எண் 355 /2024 /B2)

நகர்மன்ற தீர்மான எண்: 449 நாள்: 14.03.2024

**தீர்மானம்:** பல்வகை செலவினங்களுக்காக ரூ. 5000 /- நிரந்திர முன்பனம் பொது நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்ற ஒப்பதலுக்கு மன்றம் அனுமதி அளிக்கிறது.

## பொருள் எண் 7

இந்நகராட்சியில் மிக்ஜாம் புயலின்போது அதிக மழைப்பொழிவு காரணமாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால் கள்ளுக்கடைமேடு பகுதியில் உள்ள வளமீட்பு பூங்காவில் நிறுத்தப்பட்டிருந்த இலகு ரக வாகனங்கள் (LCV) 3 எண்ணிக்கை முற்றிலும் பழுதடைந்துள்ளதால் பொதுசுகாதார பணிகளுக்கு பயன்படுத்த இயலாத நிலை உள்ளது. எனவே பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி வாகனங்களுக்கு பழுதுநீக்கம் செய்யவும், அதற்கான தோராய செலவினம் ரூ.6.00/– இலட்சத்திற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.626/2024/H1)

நகர்மன்ற தீர்மான எண்: 450 நாள்: 14.03.2024

**தீர்மானம்:** மிக்ஜாம் புயலின்போது வளமீட்பு பூங்காவில் நிறுத்தப்பட்டிருந்த LCV 3 Nos முற்றிலும் பழுதடைந்துள்ளதால் – பழுதுநீக்கம் செய்யவும், தோராய செலவினம் ரூ.6.00/– இலட்சத்திற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

## பொருள் எண் 8

இந்நகராட்சியில் இணையத்தள பயன்பாடு அதிகரித்தாலும் அவ்வப்போது நடைப்பெறும் காணொலி ஆய்வு கூட்டங்களில் அடிக்கடி தடை ஏற்படுவதாலும் Rail Net இணையதள சேவை

மூலம் ஒரு இணைப்பினை பெறவும், அதற்கான ஆண்டு கட்டணம் ரூ.21,000/– செலவினம் பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மேற்படி பணியின் செலவினத்தினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**(ந.க.எண். 383 /2024/F1)**

நகர்மன்ற தீர்மாண எண்: 451 நாள்: **14.03.2024**

**தீர்மானம்:** Rail Net இணையதள சேவை மூலம் ஒரு இணைப்பினை பெறவும், ஆண்டு கட்டணம் ரூ.21,000/– செலவினம் பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு மன்றம் அனுமதி அளிக்கிறது.

## பொருள் எண் 9

இந்நகராட்சியில் செப்டம்பர் 2023 முதல் பிப்ரவரி 2024 வரை 6 மாதத்திற்கு ஒப்பந்ததாரர்கள் பணிப்பட்டியல்களில் பிடித்தம் செய்யப்பட்ட சரக்கு மற்றும் சேவை வரி தொகையினை உரிய தலைப்பில் செலுத்தியமைக்கு GSTR . Form 26 Filling செய்வதற்கு Filling பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண் 462/ 2023/B1)

நகர்மன்ற தீர்மான எண்: 452 நாள்: **14.03.2024**

**தீர்மானம்:** Sep 2023 to feb 2024 – for 6 months ஒப்பந்ததாரர்கள் பணிப்பட்டியல்களில் சரக்கு மற்றும் சேவை வரி தொகையினை உரிய தலைப்பில் செலுத்தியமைக்கு GSTR . Form 26 Filling – கட்டணம் சேவை கட்டணம் மொத்தம் ரூ.35000 /– பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு, மன்றம் ஒப்புதல் அளிக்கிறது.

## பொருள் எண் 10

இந்நகராட்சி 2023–24 ம் ஆண்டிற்கு சொத்துவரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம் இரசீதுகள் அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான பதிவேடுகள் படிவங்கள், A4 அளவு வெள்ளைத்தாள்கள் போன்ற எழுது பொருட்களை அரசு ஒப்புதல் பெற்ற மடிப்பாக்கம் Stationery & Registers Making Industrial Co Op Society Ltd., சென்னை என்ற நிறுவனத்திடமிருந்து வாங்கவும், அதற்கான தோராய செலவினம் ரூ.5.00/– இலட்சம் பொதுநிதியில் மேற்கொள்ளவும், மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது,

அலுவலக குறிப்பு

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண் 122/ 2022/அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 453 நாள்: **14.03.2024**

**தீர்மானம்:** **2023 – 2024**ம் தேவையான பதிவேடுகள், படிவங்கள், A4 Sheet, அரசு ஒப்புதல் பெற்ற மடிப்பாக்கம் Stationery & Registers Making Industrial Co Op Society Ltd., Chennai - செலவினம் ரூ.**5.00/–** இலட்சம் பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு – தலைவரின் முன் அனுமதி பெற்று – பணி உத்தரவு வழங்கியமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்குகிறது.

## பொருள் எண் 11

இந்நகராட்சியில், சொத்து வரி மற்றும் காலிமனை வரி கேட்பில் வருவாய் நிதி மற்றும் குடிநீர் வழங்கல் மற்றும் நூலக வரி மட்டுமே நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது. தற்போது, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 32658 /ஆர் –1/2023 நாள் 27.12.2023ல் , நகராட்சிகளில் சொத்துவரி ஆண்டு மதிப்பில் 5% கல்வி வரி விதிப்பு செய்ய நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஆரம்ப கல்வி திட்டம் 1920 பிரிவு – 34 இல் அரசின் முன் அனுமதியுடன் நகர்மன்றங்கள் சொத்துவரியுடன் கல்வி வரி விதிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் பிரிவு 35 (1) ல் சொத்துக்களின் ஆண்டு மதிப்பில் 5 விழுக்காட்டிற்கு மிகாமல் வரி விதிப்பு செய்ய வழியறை செய்யப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998 (திருத்தம்) 2022 அனைத்து நகர்புற உள்ளாட்சிகளில் 13.04.2023 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அதில் பிரிவு – 80 ல் நகர்மன்றங்கள் கல்வி வரி விதிக்க வழிவகை செய்யப்பட்டு, பிரிவு – 91ல் சொத்துவரி ஆண்டு மதிப்பில், 5 விழுக்காட்டிற்கு மிகாமல் விதிப்பு செய்ய வரையறை செய்யப்பட்டுள்ளது.

எனவே, இந் நகராட்சியில் கல்வி வரி விகிதத்திணை ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்ட சொத்துவரி ஆண்டு மதிப்பில், 5 விழுக்காடு விதித்திட உரிய நடைமுறையினை பின்பற்றி நடைமுறைபடுத்தவும், மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும், மேற்படி விபரம் நாளிதழில் விளம்பரம் செய்ய கட்டணத்தை பொதுநிதியில் செலுத்தவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

மன்றம் அனுமதி அளிக்கலாம்

(ந.க. எண் 397/2022/அ1

நகர்மன்ற தீர்மான எண்: 454 நாள்: **14.03.2024**

**தீர்மானம் :** நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை – ந.க.எண். 32658/–நாள். 27.12.2023 – சொத்துவரி ஆண்டு மதிப்பில் R - 1 /2023 5% கல்வி வரி விதிப்பு செய்ய நடைமுறைப்படுத்த நடவடிக்கை

எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. விபரம் நாளிதழில் விளம்பரம் செய்யும் கட்டணத்தை பொதுநிதியில் செலுத்தவும் மன்ற அனுமதிக்கு மன்றம் அனுமதி அளிக்கிறது.

## பொருள் எண் 12

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 6450/ 2024/ SBM – 1 (1) நாள். 07.03.2024 ன் படி பொன்னேரி நகராட்சியில் 2023–2024 ஆம் ஆண்டு Swachh Bharat Mission (U) 2.0 திட்டத்தின் கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு.

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 6450/2024/ SBM –1 (1) நாள்.07.03.2024 ன்படி பொன்னேரி நகராட்சியில் 2023–2024 ஆம் ஆண்டு Swachh Bharat Mission (U) 2.0 திட்டத்தில் கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு.

### I. சமுதாயக்கழிப்பிடம் கட்டுதல்

| வ.எ | வார்டு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | 1 | நரிக்குறவர் காலனி பகுதியில் சமுதாயக் கழிப்பிடம் கட்டுதல் | 13.00 |
| 2 | 4 | சுந்தர்ராஜ் முதல் தெரு (தீயணைப்பு நிலையம் அருகில்) சமுதாயக் கழிப்பிடம் கட்டுதல் | 13.00 |
| 3 | 8 | புளியந்தோப்பு பகுதியில் சமுதாயக் கழிப்பிடம் கட்டுதல் | 13.00 |
| 4 | 16 | சிவராஜ் தெருவில் சமுதாயக் கழிப்பிடம் கட்டுதல் | 13.00 |
| 5 | 21 | இரட்டைமலை சீனிவாசனார் சாலையில் சமுதாயக் கழிப்பிடம் கட்டுதல் | 13.00 |
| 6 | 25 | கண்ணபிரான் சாலையில் சமுதாயக் கழிப்பிடம் கட்டுதல் | 13.00 |
| 7 | 26 | வேண்பாக்கம் பள்ளம் பகுதியில் சமுதாயக் கழிப்பிடம் கட்டுதல் | 13.00 |
| | | **மொத்தம்** | **91.00** |

### II. பொதுக்கழிப்பிடம் கட்டுதல்

| வ.எண் | வார்டு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | 18 | தாலுக்கா அலுவலக சாலையில் பொதுக்கழிப்பிடம் கட்டுதல் | 31.30 |

அலுவலகக் குறிப்பு :

மன்றத்தின் பார்வைக்கு.

(ந.க. எண் 917/2022/இ1

நகர்மன்ற தீர்மான எண்: 455 நாள்: 14.03.2024

**தீர்மானம்:** 2023 – 2024 – ம் ஆண்டு – Swachh Bharat Mission (U) 2.0 திட்டத்தில் குறிப்பிட்டுள்ள பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு.

## பொருள் எண் 13

பொன்னேரி நகராட்சி டெங்கு கொசு ஒழிப்பு பணிக்காக பணியாளர்கள் வெளிக்கொணர்வு முறையில் பணி செய்ய 23.02.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு இலட்சம் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ | D.D. Amount/ D.D.No |
|---|---|---|---|---|---|
| 1 | டெங்கு கொசு ஒழிப்பு பணிக்கு பணியாளர்களை வெளிக்கொணர்வு முறையில் பணி செய்தல் | | A1 Security Services and A Facility Services | 2358720.00 | Small Scale industrie (ISI) |
| 2 | | | ALF | 2411136.00 | 144946 |
| 3 | | | Thadchanya Enterprises | 2503737.60 | 062761 |
| 4 | | | S.S foundation | 2616432.00 | Online NEFT இல்லை |
| 5 | | | Sukguru Society Services | 2632593.60 | 116585 |

மேற்கண்ட A1 Security Services and A1 Facility Services மற்றும் ALF என்ற நிறுவனங்களின் விலைப்புள்ளியில் மாவட்ட ஆட்சித்தலைவரின் தினக்கூலி ஊதிய விகிதத்திற்கு முரண்பாடாக உள்ளது.

Thadchanya Enterprises நிறுவனம் விலைப்புள்ளியில் மாவட்ட ஆட்சித்தலைவரின் தினக்கூலி ஊதிய விகிதத்திற்கு இணையாக உள்ளது. ஆனால் பணியாளருக்குண்டான பயன்கள் கிடைக்க வாய்ப்புள்ளது. நிர்வாக செலவினம் ரூ 382 குறைவாக உள்ளது. அந்நிறுவனம் 2% முதல் 3% வரை நிர்வாக செலவினம் வழங்குமாறு நிர்வாகத்திடம் கோரியுள்ளது.

S.S foundation மற்றும் Sukguru Society Services நிறுவனம் கோரியுள்ள விலைப்புள்ளி அதிகமாகும். ஆதலால் நிர்வாகத்திற்கு செலவினம் அதிகமாக வாய்புள்ளது.

Thadchanya Enterprises என்ற நிறுவனம் குறிப்பிட்டுள்ள விலைப்புள்ளி ஏற்று மற்றும் நிர்வாக செலவினமாக கோரிய 3% வழங்கும் பட்சத்தில் நிர்வாகத்திற்கு செலவினம் குறைவு ஏற்படும் வாய்ப்புள்ளது.

**அலுவலகக்குறிப்பு :**

மேற்கண்ட பணியில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த Thadchanya Enterprises என்பவருக்கு பணி உத்திரவு வழங்கலாம்.

**(ந.க.எண் 06/2021/அ1)**

நகர்மன்ற தீர்மான எண்: 456 நாள்: **14.03.2024**

**தீர்மானம்:** Dengue கொசு ஒழிப்பு பணிக்காக பணியாளர்கள் வெளிக்கொணர்வு முறையில் பணி செய்ய **23.02.2024** ஒப்பந்தபுள்ளி கோரியதில், ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும். குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த Thadchanya Enterprises என்பவருக்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதி அளிக்கிறது.

## பொருள் எண் 14

பொன்னேரி நகராட்சியில் **3** மாத காலத்திற்கு வெளிக்கொணர்வு முறையில் டெங்கு ஒழிப்பு பணிகளை மேற்கொள்ள **20.10.2023** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய Aarudra Corp, என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தகாலத்தினை **31.01.2024** – இடன் முடிவடைந்ததை தொடர்ந்து **29.02.2024** வரை கால நீட்டிப்பு செய்து மன்ற தீர்மானம் எண் நாள் **05.03.2024**ன்படி ஒப்புதல் பெறப்பட்டது. தற்போது டெங்கு ஒழிப்பு பணிகளை தொய்வின்றி மேற்கொள்ள **01.03.2024** முதல் **14.03.2024** வரை காலநீட்டிப்பு செய்யவும், அதற்கான தோராய செலவினம் ரூ. **2.00** இலட்சத்தை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதி அளிக்கலாம்

**(ந.க.எண் 06/2023/எச்1)**

நகர்மன்ற தீர்மான எண்: 457 நாள்: **14.03.2024**

**தீர்மானம்: Dengue** ஒழிப்பு பணிகளை மேற்கொள்ள **01.03.2024** முதல் **14.03.2024** வரை காலநீட்டிப்பு செய்யவும் **–** செலவினம் ரூ. **2.00** இலட்சத்தை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்ற ஒப்புதலுக்கு – மன்றம் அனுமதி அளிக்கிறது.

## மேசைப்பொருள் எண்.15

பொன்னேரி நகராட்சியில் பொதுநிதியின் கீழ் கீழ்க்காணும் பணியினை மேற்கொள்ளவும், அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு, மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண். | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 11 | தேரடி 3வது குறுக்கு தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைத்தல் | 1.50 |

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1. பொதுமக்களின் அடிப்படை வசதியினை கருத்திற்கொண்டு பணிகளை மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்படி பணிகளுக்கான செலவினத்தினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**(ந.க.எண். 104/2023 அ1)**

நகர்மன்ற தீர்மான எண்: 458 நாள்: **14.03.2024**

**தீர்மானம்: wd 11** - தேரடி 3வது குறுக்கு தெருவிற்கு Cement சாலை அமைத்தல் மதிப்பீடு ரூ. **1.50** இலட்சத்திற்கு – பணியினை மேற்கொள்ள செலவினத்தை, பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கிறது.

**<u>மேசைப்பொருள் எண் 16</u>**

பொன்னேரி நகராட்சியில் மிக்ஜாம் புயல் மற்றும் வடகிழக்கு பருவமழையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து நிவாரண மையங்களில் தங்க வைக்கப்பட்ட பொதுமக்களுக்கு மூன்று வேளையும் உணவு, தேநீர்மற்றும் குடிநீர் சப்ளை செய்தமைக்கு வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.2,62,710.00 பொதுநிதியில் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1. மேற்படி செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**(ந.க.எண்.1376/2023இ1)**

நகர்மன்ற தீர்மான எண்: 459 நாள்: **14.03.2024**

**தீர்மானம்:** மிக்ஜாம் புயலினால் பொதுமக்களுக்கு மூன்று வேளையும் உணவு, Tea, குடிநீர் Supply - செய்தமைக்கு தொகை. ரூ.2,62,710.00 பொதுநிதியில் வழங்க மன்ற அனுமதிக்கு

**<u>மேசைப்பொருள் எண் 17</u>**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கினங்க பொதுமக்களின் கோரிக்கைகளை அவர்களின் இருப்பிடத்திலேயே நிவர்த்தி செய்யும் பொருட்டு ‘‘மக்களுடன் முதல்வர்’’ என்னும் சிறப்பு திட்டத்தின் கீழ் பொன்னேரி நகராட்சி பகுதியில் **04.01.2024, 09.01.2024** மற்றும் **10.01.2024** ஆகிய நாட்களில் சிறப்பு முகாம்கள் நடைபெற்றது. அம்முகாம்களில் பங்கு பெற்ற

பிற துறைகளான வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, ஊரக வளர்ச்சி துறை, எரிசக்தி துறை/ தமிழ்நாடு மின்வார வாரியம், காவல் துறை, மாற்றுத்திறனாளிகள் துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை/ஆதிதிராவிடர் நலத் துறை/ பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை/ கூட்டுறவுத்துறை, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை உள்ளிட்ட துறை அலுவலர்களுக்கு உணவு மற்றும் குடிநீர் சப்ளை செய்தமைக்கு வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ. 92,256.00 பொதுநிதியில் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மேற்படி செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.1431/2023/இ1)

நகர்மன்ற தீர்மான எண்: 460 நாள்: 14.03.2024

**தீர்மானம் :** மக்களுடன் முதல்வர் – சிறப்பு முகாம்கள் – பங்கு பெற்ற துறை அலுவலர்களுக்கு உணவு & குடிநீர் – பட்டியல் தொகை ரூ. 92,256.00 வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

(ஒம்) கி. பரிமளம் விசுவநாதன்
நகர்மன்ற தலைவர்,
பொன்னேரி நகராட்சி

/உண்மை நகல்/

ஆணையர்,
பொன்னேரி நகராட்சி
திருவள்ளூர் மாவட்டம்.